2017 ஜூன் 28]

மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற எண்ணத்திலே வைக்கப்பட்ட நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

93—

நீதிமன்றக் கட்டடம்

***6573—திரு. வீ. அலெக்சாண்டர்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, அம்பத்தூர் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உயர் நீதிமன்றத்திலிருந்து கருத்துரு பெறப்பட்டவுடன் புதிய நீதிமன்றம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர் அவர்கள்.*

திரு. வீ. அலெக்சாண்டர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர், (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதில் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் எங்களுடைய சத்துணவு தந்த சரித்திர நாயகன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒரே அரசியல் வாரிசாக வாழ்ந்து, மண்ணுலகை ஆண்டு, இன்று விண்ணுலகையும்*

ஆண்டுகொண்டிருக்கின்ற எங்களுடைய புரட்சித் தலைவி, எங்கள் இதயங்களிலே நாங்கள் தினந்தோறும் பூஜை செய்கின்ற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–25

புரட்சித் தலைவர் அவர்களுடைய நூற்றாண்டு விழா சிறப்பான முறையிலே தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதன்நிமித்தமாக புரட்சித் தலைவருடைய நினைவாக, புரட்சித் தலைவர் வாழ்ந்த இடமான போரூரில் ஒரு பாலத்தைக் கட்டி, அதற்கு புரட்சித் தலைவர், பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரைச் சூட்டிய நம்முடைய தமிழக அரசுக்கும், *(மேசையைத் தட்டும் ஒலி)* நம்முடைய தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய சார்பாகவும் 1½ கோடி உண்மைத் தொண்டர்களின் சார்பாகவும், எங்களுடைய மாவட்டக் கழகத்தின் சார்பாகவும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்பத்தூர் பகுதியிலே நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்பது அப்பகுதி மக்கள் மற்றும் வழக்கறிஞர்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். அம்பத்தூர் பகுதியில் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடத்தைக் கட்டித்தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் நீதிமன்றத்திற்கான திட்ட மதிப்பீடு இன்னமும் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை. திட்ட மதிப்பீடு உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டவுடன், உயர் நீதின்றத்தால் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டவுடனே, மாண்புமிகு தமிழக முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று, கண்டிப்பாக கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூன் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர் அவர்கள்.

திரு. வீ. அலெக்சாண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைக் கூறியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதிக்குட்பட்ட பந்தலூரில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்த நீதிமன்றம் ஏற்படுத்தப்படும்போது, அரசு உதவி வழக்கறிஞர் post–ஐ create செய்யாமல் விட்டுவிட்டார்கள். அதனால் அரசின் சார்பாக வழக்காடுவதற்கு உதவி வழக்கறிஞர்கள் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இதுகுறித்த கருத்துருவை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த post–ஐ உருவாக்கித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், அங்கு Judicial Magistrate Court இருக்கிறது. அந்த court–ஐ District Munsif–cum–Judicial Magistrate Court ஆக மாற்றித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அதைப்போல, நீலகிரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 75 சதவிகிதம் அளவிற்கு labourers–தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் Labour Court–ல் தாவாக்களைப் போடவேண்டுமென்றால், கோயம்புத்தூருக்குச் சென்றுதான் மனு செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே, ஊட்டியில் Camp Court இருக்கிறது. அந்த Camp Court–க்கு எல்லா தகுதிகளும் இருப்பதனால்தான், அங்கு Labour Court–ஐ Camp Court–ஆக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த Camp Court–ஐயும், நிரந்தர Court ஆக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அரசு உதவி வழக்கறிஞரை நியமனம் செய்யவேண்டுமென்று என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து அரசு உடனடியாக ஆராய்ந்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த நீதிமன்றத்தை District Munsif–cum–Judicial Magistrate Court ஆக மாற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி, உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரை பெறப்பட்டவுடனே, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், அங்குள்ள Labour Court–ஐ நிரந்தரமான தொழிலாளர் நீதிமன்றமாக அமைக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை மீதும், உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரை பெறப்பட்டவுடனேயே, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை வாழவைக்கும் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை அமைதியாக வழிநடத்தி, அம்மா அவர்களின் கனவை நனவாக்கிக் கொண்டிருக்கும் தமிழகத்தின் முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய வாழ்த்துகளோடும், (மேசையைத்

2017 ஜூன் 28]

தட்டும் ஒலி) வாய்ப்புக் கொடுத்த தங்களின் ஆதரவோடும், அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய 2011–2016 ஆட்சியின்போது, அந்தியூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் அறிவிக்கப்பட்டு, புதிய கட்டடம் கட்டப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், அந்தியூர் தொகுதி மக்கள், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு தற்போது பவானி தொகுதி, பவானிக்குச் சென்று வருகிறார்கள். குறிப்பாக அந்தியூர் தொகுதியின் கடைக்கோடியிலிருக்கும் பர்கூர் ஊராட்சியிலிருந்து சுமார் 60 கிலோ மீட்டருக்கும்மேல் பயணம் செய்து, பவானிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் மக்களுக்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும், தமிழக முதல்வர் தலைமையில் நடைபெறும் அரசு, மக்களின் நலன் கருதியும், போக்குவரத்துச் சிரமம் கருதியும், கால விரயம் ஏற்படுவதைத் தவிர்க்கவும், வருவாய் வட்டமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அந்தியூர் தொகுதியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜாகிருஷ்ணன், கேள்வியைச் சீக்கிரம் முடியுங்கள்.*

முற்பகல் 10–30

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கோரிக்கையாக வைக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்குகளின் எண்ணிக்கை, புதிதாகத் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டுதான் புதிய*

[*2017 ஜூன் 28*

நீதிமன்றங்களைத் தொடங்க வேண்டும். புதிய நீதிமன்றங்கள் திறக்கப்படுவதுபற்றி உயர் நீதிமன்றம்தான் முடிவெடுக்க வேண்டும். உயர் நீதிமன்றம் அரசுக்குப் பரிந்துரை செய்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி, அதற்கு மேல் நடவடிக்கை எடுப்பதற்கான வழிவகை அரசால் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

94—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

5546*—திரு. மு. சக்ரபாணி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதி, கிளியனூரில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, கிளியனூரில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி அவர்கள்.*